R4929

FERVENT IN SPIRIT - SERVING THE LORD
ஆவியில் அனலாயிருங்கள் – கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

இந்த சுவிசேஷ யுகத்தில் கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக நமது பரம பிதாவானவர் அவரது பல்வேறு முகவர்கள் மூலம் தம்முடைய குமாரனுக்கு ஒரு தோழியை, பல அங்கங்கள் அடங்கிய ஒரு மணவாட்டியை, உலகத்தை ஒப்பிடும் போது ஒரு சிறு மந்தையை தேடிக் கொண்டிருக்கிறார். அநேக நற்பண்புகள் விரும்பப்படுகிறது; இவையனைத்தும் மணவாட்டி வகுப்பாரில், அவர்களது நிச்சயிக்கப்பட்ட மணவாளனின், அவர்களது இரட்சகரின் குணலட்சண சாயலை ஏற்படுத்தும். மாம்சத்தின்படி இவைகளெல்லாம் குறைவில் இருக்கின்றன. ஆனால் அதிர்ஷ்டவசமாக, அவர்கள் மகிமையான பரிசுக்கு பாத்திரரா அல்லது அபாத்திரரா என்று தீர்மானிப்பதற்கு மாம்சம் அடிப்படையாக இருக்காது. அனைத்தும் சித்தம், சிந்தை, இருதயத்தை சார்ந்தே இருக்கும். இது நல்லது மாத்திரமல்ல, முற்றிலும் சரியானது. "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்." அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பார்கள். அவர்கள் இரட்சகருடன் உடன் சுதந்தரராக இருப்பார்கள்.

கர்த்தர் விரும்புகிற, அங்கீகரிக்கிற இந்த இருதய பரிசுத்தம் இருதய விசுவாசம் என்ற சொற்றொடரில் சுருக்கமாக கூறலாம். சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளில் தெய்வீக அரசாங்கத்தின் கொள்கைகளில் விசுவாசம் மற்றும் பிதாவாகிய தேவன் மற்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மற்றும் அவரது சரீர அங்கங்களின் மேல் விசுவாசம், மேலும் தெய்வீக நோக்கத்திற்கும் வெளிப்படுத்தலுக்கும் இசைவாக உலக மனுக்குலத்தின் மேல் அனுதாப அன்புகொள்வது ஆகும். அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது." "இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்." (2 பேதுரு 1:8,11)

இந்த உலகத்தோடு இணைந்திருக்கிற ஒரு குறிப்பிட்ட சக்தி "பெருகியிருக்கிறது." பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் பிதாவானவரின் ஆவியினால், அன்பின் ஆவியினால், நீதி மற்றும் விசுவாசத்தின் ஆவியினால் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். இந்த அன்பு வாழ்க்கையின் அனைத்து காரியங்களிலும் எவ்வளவு பெருகியிருக்கிறது, ஊடுருவியிருக்கிறது. கர்த்தரின் இந்த ஆவி நம்மில் பெருகியிருந்தால், அது நமது வேலை, நமது சந்தோஷம், நமது இல்லங்கள், நமது பட்டறைகள், நமது சமையலறைகள், சாப்பாட்டு அறைகள், படுக்கை அறைகள், நமது சிந்தைகளில் தாக்கத்தைக் கொடுக்கும்.

மிகவும் குறைவாக பெருகியிருக்கிற கர்த்தரின் ஆவியை அளவிட முடியுமா? மேலும் அதன் மூலம் சபை முதலானவைகளில் விசேஷித்த சந்தர்ப்பங்களில் சில ஆவிக்குரிய காரியங்களில் வெறும் சந்தோஷத்தை அனுபவிக்க முடியுமா? அது மிகையான அன்பு, மணவாட்டி வகுப்பாரின் அங்கங்களாக மேசியாவின் ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் பரிபூரணமாக அளிக்கப்படுகிறவர்களின் வாழ்க்கையின் அனைத்து காரியங்களிலும் எங்கும் பரவியுள்ள நமது கர்த்தரின் செல்வாக்கு தேவைப்படுகிறது. அந்த பெருகுகிற விசுவாசத்தையும், அன்பையும் அவர்கள் பெற்றிருந்தால், அவர்கள் தேவனுடைய பிரியமான குமாரனாகிய இரட்சகரின் சாயலை பெற்றிருப்பார்கள். இல்லையென்றால் அப்படி ஆகமாட்டார்கள். அவருடைய குமாரனின் சாயலாகிறவர்கள் மட்டுமே மேசியாவின் ராஜ்யத்தில் பங்கு பெறுவார்கள் என்று தேவன் முன்னரே தீர்மானித்திருக்கிறார். மற்றவர்கள் "திரள் கூட்ட" வகுப்பாரில் இரண்டாவதான இடத்தை உண்மையில் அடைவார்கள். அவர்கள் சிங்காசனத்தை அடையவோ மணவாட்டி வகுப்பாரின் அங்கமாகவோ ஆகமுடியாது.

இந்த பெருகுகிற அன்பு தேவனுக்கும் நீதிக்குமான இந்த வைராக்கியம் எவ்வளவு தேவையானது, முக்கியமானது என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்கிறோம். தீயவர்களுக்கு சரியான வழிகளில் அன்பு செலுத்தி உதவினாலும் அது அக்கிரமத்தை அந்த அளவுக்கு வெறுக்கும்.

அறுவடை ஒரு விசேஷித்த சோதனை காலம்

நாம் "அறுவடை காலத்தில்" இருக்கிறோம் என்பதை நிச்சயமாக அங்கீகரிக்கிறோம். கர்த்தர் இப்பொழுது கோதுமையை முதிரச் செய்து, அதை களைகளிலிருந்து பிரிக்கிறார் என்றும் நாம் யூகிக்க வேண்டும். கோதுமையை இரண்டு வகுப்புகளாக பிரிக்கிறார் என்று நாம் சொல்லலாமா? அது அறுவடை காலத்தில் விசேஷித்த சோதனையாக இருக்கிறது. இது குறித்து வேத வசனங்களானது நமது கவனத்தை இழுக்கிறது; தேவனுடைய முழு சர்வாயுத வர்க்கத்தின் அவசியத்தை குறித்தும் அடிக்கடி எச்சரிக்கிறது. அசதியாயிராமல் ஜாக்கிரதையாக இருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.

அப்படிப்பட்ட சோதனைகள் கர்த்தரின் விளைந்த கோதுமை வயல் முழுவதும் முன்னேறுவதை நாம் எதிர்பார்க்க வேண்டும் என்பதை காவற்கோபுரத்தின் கண்ணோட்டத்தின்படி நாங்கள் உணருகிறோம். அன்பு மற்றும் விசுவாசம், நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல், சகோதர அன்பு மற்றும் பொறுமை ஆகியவைகளில் சோதனைகளை தேவன் அனுமதிக்கிறார். சில சமயங்களில் மந்தைக்கு, உதவி செய்து பாதுகாத்து, எச்சரித்து துணையாக இருக்க வேண்டிய மூப்பர்களால் கூட சோதனைகள் வரக்கூடும். சில சமயங்களில் தேவனுடைய வார்த்தை மற்றும் உதாரணங்களுக்கு எதிராக மூப்பர்கள் ஆளுமைமிக்க மனப்பான்மையுடன் சகோதரர்களின் பொறுமை மற்றும் அன்பை சோதிக்கிறார்கள்.

சில சமயங்களில் சோதனையானது அடுத்த பக்கத்திலிருந்து வரக்கூடியதாக இருக்கிறது. வகுப்பின் சில அங்கங்கள் கடுமையாக இருந்து, விசுவாசமுள்ளவர்களாக இருந்தாலும் தேவையற்ற பிடிவாதத்துடன் ஒட்டகத்தை விழுங்கவும், மூப்பர் எதைச் செய்தாலும் குற்றம் காணவும் மிகவும் தயாராக இருப்பார்கள். இப்படிப்பட்ட அனுபவங்கள் ஒரு பக்கத்திலிருந்தோ அல்லது மறுப்பக்கத்திலிருந்தோ வந்தாலும் அவை சோதனைகள் தான். ஒவ்வொரு கர்த்தருடைய ஜனமும் எப்படி இந்த சோதனைகளை ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்பதைக் காணவும், அவர்களது இருதயத்திலும் குணலட்சணத்திலும் என்ன தாக்கத்தை பெறுகிறார்கள் என்பதைக் காணவும் அது அவசியமாகிறது. அனுபவங்கள் அவனை கசப்படையச் செய்தால், கோபமடையச் செய்தால், அவனது கவுரவத்தை ஆழமாக காயமடையச் செய்தால் அது அவனுக்கு எப்படிப்பட்ட ஒழுக்கத்துக்குரிய அனுபவங்கள் தேவை என்பதை நிரூபிக்கிறது. அவனது சொந்த குறைபாட்டை காண்பிக்கவும், இரக்கத்திற்காகவும் உதவிக்காகவும் தெய்வீக கிருபையின் சிங்காசனத்தை நோக்கவும் செய்கிறது.

மறுபடியும் சில பிரியமான வகுப்புகள் தப்பறையான போதனைகள் மூலமாக சத்துருவானவரின் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. சத்தியத்தையும் யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டங்களையும் பாதுகாக்க முயற்சித்தலிலும் அதற்கு இசைவாக தங்களது நிலையை பராமரிக்கவும் கஷ்டங்களை பெறுகிறார். இன்னொரு வகையில் பாசாங்குத்தனமான அன்பான நண்பர்கள் மூலம் கஷ்டங்கள் எழும்பலாம்; அவர்கள் ஒன்றுமில்லாத வேறுபாடுகளை கண்டுபிடிக்க முயற்சிப்பார்கள்; இணக்கமான ஆவிக்குப் பதிலாக விவாதத்திற்குரிய ஆவியை தூண்டுவார்கள்; அன்பைக் காட்டிலும் முரண்பாட்டை தூண்டுவார்கள்.

அன்பான சகோதர சகோதரிகளே, ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைத்திலும் நாங்கள் துணை நிற்கிறோம். நாம் சோதனைக்காலத்தில் இருக்கிறோம்; இந்த பல்வேறு காரியங்கள் நமது சோதனைகளாக இருக்கின்றன. கர்த்தர், சத்தியம் மற்றும் சகோதரர்களுக்காக தீவிரமான ஆர்வத்தை செயல்படுத்தினால் மட்டுமே விசுவாசத்துடன் நிற்கவும் மற்றவர்களுக்கு விசுவாசத்துடன் நிற்க உதவவும் நாம் நம்பிக்கை கொள்ள முடியும். நாம் மனஉறுதி குன்றியவர்களாக இருத்தலாகாது. நாம் மனஉறுதியுடன் இருந்தால் சீக்கிரத்தில் நமது பரிசை அறுவடை செய்வோம். மேலும் "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானனுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி" என்கிற ஆண்டவரின் சத்தத்தைக் கேட்போம்.

நாம் அமைதியின்மை, முணுமுணுப்பு முதலானவைகளின் காலத்தில் இருக்கிறோம். இப்படிப்பட்ட முணுமுணுப்பும் முறுமுறுத்தலும் "பரிசுத்தவான்களாக ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்கு" ஏற்புடையதல்ல என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. நாம் பரிசுத்த ஆவியின் கனிகளையும் கிருபைகளையும் நாம் அதிகமதிகமாக வளர்ப்போமாக. "விசுவாச வீட்டாரின்" நமது சகோதரர்களுடன் இவைகளை செயல்படுத்துவோமாக. "நமக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்திற்கு தக்கதாக யாவருக்கும் நன்மை செய்வோமாக." நாம் ஒருவருக்கொருவர் பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் இருப்போமாக. சமாதானம், சந்தோஷம், நலம் மற்றும் ஜீவனுள்ள தேவனுடைய சபையாகிய கிறிஸ்துவின் சரீரம் கிருபையில் வளரவும் விசேஷித்த விதமாக நாடுகிறவர்களுக்கு கர்த்தரின் விசேஷித்த ஆசீர்வாதம் வருகிறது.